முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

வினா வரிசை எண் 227, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் K. அர்ச்சுணன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

227—

சன்னதியைப் புனரமைத்தல்

***3119—திரு. அம்மன் K. அர்ச்சுணன்:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் (வடக்கு) தொகுதி, மருதமலை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் உள்ள பாம்பாட்டி சித்தர் சன்னதியைப் புனரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) உறுப்பினர் கேட்டிருக்கின்ற அந்த பாம்பாட்டி சித்தர் ஆலயம் மருதமலை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்குள் அமைந்திருக்கின்றது. கடந்த 2013 ஆம் ஆண்டுதான் திருப்பணிகள் நடைபெற்று குடமுழுக்கு நடந்து முடிந்திருக்கிறது. அடுத்தாண்டு மீண்டும் குடமுழுக்கு நடைபெற வேண்டிய நிலை இருந்தாலும், முன்கூட்டியே அதற்குண்டான பணிகளை தற்போதே எடுத்துக்கொண்டிருக்கின்றோம். ஆகவே, இந்தத் திருப்பணிகளோடு சேர்த்து பாம்பாட்டி சித்தர் வாழ்ந்த அந்த இடத்தில் பக்தர்கள் வந்து நல்ல முறையிலே தியானம் செய்யக்கூடிய வகையிலேயும், அவரை தரிசித்து செல்லக்கூடிய வகையிலேயும் ஒரு நல்ல சூழ்நிலை, ஓர் இரம்மியமான சூழ்நிலை உருவாக்கித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2022 மே 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் K. அர்ச்சுணன் அவர்கள்.*

திரு. அம்மன் K. அர்ச்சுணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013 ஆம் ஆண்டு குடமுழுக்கு நடைபெற்றது உண்மைதான். இப்போது பாம்பாட்டி சித்தர் சன்னதி அருகில் சுப்பிரமணிய சுவாமிக்கு அபிஷேகம் செய்கின்ற நீரும் அதைச் சுற்றியுள்ள கழிவுநீரும் பாம்பாட்டிச் சித்தர் ஓடை அருகில் வருவதால் அங்கு துர்நாற்றம் ஏற்படுகிறது. அதைச் சுத்தம் செய்து, பக்தர்கள் வந்து தரிசனம் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வசதி செய்து தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 24-7-2021 அன்று அந்தத் திருக்கோயிலுக்கு நேரடியாகச்சென்று துறை சார்ந்த அதிகாரிகளோடு ஆய்வினை மேற்கொண்டோம். அங்கே தங்க ரதத்திற்கு சுற்றுப்பாதை அமைக்க வேண்டுமென்றார்கள். அதேபோல், சுவாமிக்கு படைக்க இருக்கின்ற நைவேத்ய பிரசாதத்திற்கு தனியாக மடப்பள்ளி கட்ட வேண்டுமென்றார்கள். அதோடு இல்லாமல், அந்தத் திருக்கோயிலுக்கு மலைப் பாதை அமைக்க வேண்டுமென்றார்கள்; திருப்பணிகள் நடந்து குடமுழுக்கு நடத்தப்படுவதற்கு முன்பாகவே இந்த ஒட்டுமொத்தப் பணிகளும் சுமார் 6½ கோடி ரூபாய் செலவில் இந்த ஆண்டு அறிவிக்கப்பட்ட மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி முடிக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவிப்பு புத்தகத்தைப் புரட்டிப் பார்த்தாலே தெரியும், சுமார் ரூபாய் 6½ கோடி அளவில் அந்தத் திருக்கோயிலுக்கு மாத்திரம் திருப்பணிக்கு நிதியொதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, நீங்கள் கூறியதுபோல் கழிவுநீர் அடைப்பு இருக்கிறது என்றால், உடனடியாக துறை அதிகாரிகளுக்கு அதைத் தெரிவித்து, அந்தக் குறையை நிவர்த்தி செய்து, நாளைய தினமே உங்களுக்கு பதில் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் K. அர்ச்சுணன் அவர்கள்.*

திரு. அம்மன் K. அர்ச்சுணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கோயில் பிரசித்தி பெற வேண்டுமென்றால். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எல்லாம் செய்து தருகிறேன் என்று மாண்புமிகு அமைச்சர் சொல்லிவிட்டார். நீங்கள் நன்றிதான் சொல்ல வேண்டும்.*

திரு. அம்மன் K. அர்ச்சுணன்: *இரண்டாவது கேள்விக்கு ஏதாவது பதில் கேட்போம் என்றுதான்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி கேளுங்கள்.*

திரு. அம்மன் K. அர்ச்சுணன்: *கடைசியில் நன்றி சொல்லிவிடுகிறேன். மருதமலை முருகன் கோயில் பிரசித்திபெற்றது என்றால் அது பாம்பாட்டி சித்தரால்தான். அந்தக் கோயில் மேலும் பிரசித்தி பெற வேண்டுமென்றால் நீங்கள் சொல்வதைப்போல், செய்தால் உண்மையிலேயே இன்னும் ஏழாவது படை வீடாக இருக்கும் சுப்பிரமணியசுவாமி கோயில் அங்கு இருக்கும் பக்தர்களுக்கு மட்டுமல்ல, தமிழகத்தில் இருக்கும் அத்துணை பக்தர்களுக்கும் அருள்புரிவார் என்று தெரிவித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலுக்கு நன்றியையும் கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவையிலேயே இருங்கள், போய்விடாதீர்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *பாம்பாட்டி சித்தர் பற்றி உறுப்பினர் அவ்வளவு சொல்கிறாரே, அவர் யார் என்று சொல்லுங்கள் பார்க்கலாம். (குறுக்கீடு) சொன்னார்களா?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் மருதமலை முருகர் திருக்கோயிலில், அவர் தவம் செய்து, சித்து வேலைகளில் ஈடுபட்டு, சர்ப்பமாக இருந்து, சுரங்கம் வழியாகச் சென்று, முருகனை வழிபட்டதாக வரலாறு. அவர் தென்காசி*

2022 மே 5]

மாவட்டத்தில் ஜீவ சமாதி அடைந்துள்ளார். அந்த ஜீவ சமாதியையும் தனியார் சிறந்த முறையில் நிருவகித்து வருகிறார்கள். கூடுதலாக சித்தர்கள் பற்றி சொல்ல வேண்டுமென்றால், சித்தமெல்லாம் சிவமயம் என்பது ஒருபுறம் என்றாலும், ஜீவ நாடியில் நிறைந்திருப்பவர்கள்தான் சித்தர்கள். அதை முழுமையாக இந்த அரசு, இந்து சமய அறநிலையத் துறை ஏற்றுக்கொண்டதால் இந்த ஆண்டு 3 சித்தர்களுக்கு விழா எடுப்பது குறித்து நேற்றைய மானியக் கோரிக்கையிலே தெரிவித்திருக்கின்றோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் விட்டுச்சென்ற பணிகளை மற்றும் நீங்கள் தொடாத பணிகளையெல்லாம் தொட்டு நிறைவேற்றுகின்ற அரசாக இந்த அரசு இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள், சித்தர் வரலாற்றில் இருந்து அகில உலக வரலாற்றையும் வைத்திருக்கிறீர்கள் நன்றி, உங்களுக்கு.*

வினா வரிசை எண் 228, மாண்புமிகு உறுப்பினர் திரு. பூண்டி கே. கலைவாணன், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

228—

மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம்

***26634—திரு. பூண்டி கே. கலைவாணன்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் தொகுதி, திருவாரூரில் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சா.மு. நாசர், பால்வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*